**காலை மாலை ஓதும் கனதிமிகு திக்ரு-துஆக்கள்**

ஆயத்துல் குர்ஸி (நூல்: புகாரி)

ஸூரத்துல் இக்லாஸ், ஸூரரத்துல் ஃபலக், ஸூரத்துன் நாஸ் (மூன்று முறை ஓதவும்) (நூல்: அபூதாவூத்)

سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهِ

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் துதியுமாகும். (100 முறை ஓதவும்) (நூல்: புகாரி)

اَسْتَغْفِرُ اللهَ وَاَتُوْبُ اِلَيْهِ

எனது பிழைகளை மன்னிப்பாயாக. இன்னும் நான் உன்னிடமே தவ்பா செய்து மீள்கிறேன். (70 அல்லது 100 முறை ஓத வேண்டும்) (நூல்: புகாரி)

اَعُوْذُ بِكَلِمَاتِ اللهِ التَّامَّاتِ كُلِّهَا مِنْ شَرِّ مَا خَلَقَ

அல்லாஹ்வின் முழுமையான வார்த்தைகளைக் கொண்டு படைப்பின் தீங்குகளை விட்டும் பாதுகாவல் தேடுகிறேன். (நூல்: முஸ்லிம்)

رَضِيْتُ بِاللهِ رَبًّا وَبِالْاِسْلَامِ دِيْنًا وَبِمُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ نَبِيًّا وَرَسُوْلًا

அல்லாஹ்வை ரப்பாகவும், இஸ்லாமிய சன்மார்க்கத்தை தீனாகவும், முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்களை இறைத்தூதராகவும் பொருந்திக் கொண்டேன். (மூன்று முறை ஓத வேண்டும்) (நூல்: அஹ்மத்)

لَا اِلٰهَ اِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ، لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ، وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ

வணக்கத்திற்குரிய நாயன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை. அவன் தனித்தவன். இணைதுணை இல்லாதவன். அவனுக்கே அரசாட்சியும், புகழனைத்தும் சொந்தம். அவன் யாவற்றின் மீதும் ஆற்றல் மிக்கோன். (10 அல்லது 100 முறை ஓத வேண்டும்) (நூல்: புகாரி)

www.sufimanzil.org

سُبْحَانَ اللّٰهِ وَبِحَمْدِهٖ عَدَدَ خَلْقِهٖ وَرِضَا نَفْسِهٖ وَزِنَةَ عَرْشِهٖ وَمِدَادَ كَلِمَاتِهٖ

அல்லாஹ்வை துதிக்கிறேன். அவனைப் புகழ்வதைக் கொண்டும் அவனது படைப்பினங்களின் எண்ணிக்கையைக் கொண்டும், அவன் பொருந்திக் கொள்வதைக் கொண்டும் அவனது சிம்மாசனத்தின் எடையைக் கொண்டும் இன்னும் அவனின் வார்த்தைகள் கணக்கிலடங்காதே அதற்கு அல்லாஹ்வைத் துதிக்கிறேன். (மூன்று முறை ஓத வேண்டும்) (நூல்: முஸ்லிம்)

بِسْمِ اللّٰهِ الَّذِيْ لَا يَضُرُّ مَعَ اسْمِهٖ شَيْءٌ فِي الْاَرْضِ وَلَا فِي السَّمَاءِ وَهُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ

அல்லாஹ்வின் அருட்பெயரால் துவங்குகிறேன். அவனின் திருப்பெயருடன் வானத்திலும் பூமியிலுமுள்ள எதுவும் தீங்கு விளைவிக்க முடியாது. மேலும் அவன் கேட்போனாகவும், யாவையும் அறிந்தோனாகவும் இருக்கிறான். (நூல்: அபூதாவூத்)

اَللّٰهُمَّ بِكَ اَصْبَحْنَا وَبِكَ اَمْسَيْنَا وَبِكَ نَحْيَا وَبِكَ نَمُوْتُ وَاِلَيْكَ النُّشُوْرُ

யாஅல்லாஹ்! உனது வல்லமையைக் கொண்டே காலை நேரத்தை அடைந்தோம். இன்னும் உனது வல்லமையைக் கொண்டே மாலை நேரத்தையும் அடைந்தோம். உனது வல்லமையைக் கொண்டே உயிர் வாழ்கிறோம். இன்னும் உனது வல்லமையைக் கொண்டே மரணமாகிறோம். மேலும் உன்னளவிலேயே மீளக்கூடியவர்களாக இருக்கிறோம். (நூல்: அபூதாவூத்) (மாலையில் ஓதும்போது அஸ்பஹ்னா என்பதற்கு பதிலாக அம்ஸைனா என்றும் அம்ஸைனா என்பதற்குப் பதிலாக அஸ்பஹ்னா என்றும் முடிவில் நுஷூர் என்பதற்குப் பதிலாக மஸீர் என்றும் ஓத வேண்டும்)

اَللّٰهُمَّ فَاطِرَ السَّمٰوَاتِ وَالْاَرْضِ، عَالِمَ الْغَيْبِ وَالشَّهَادَةِ، لَا اِلٰهَ اِلَّا اَنْتَ، رَبَّ كُلِّ شَيْءٍ

وَمَلِيْكَهُ، اَعُوْذُ بِكَ مِنْ شَرِّ نَفْسِيْ، وَمِنْ شَرِّ الشَّيْطَانِ وَشِرْكِهٖ، وَاَنْ اَقْتَرِفَ عَلٰى

نَفْسِيْ سُوْءًا (الترمذي)

www.sufimanzil.org

அல்லாஹ்வே வானங்களையும், பூமிகளையும் படைத்தான். மறைவானவற்றையும், அத்தாட்சிகளையும் மிகவும் அறிந்தவன். உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. எல்லாவற்றையும் இரட்சித்து அரசாட்சி புரிபவன். என்னிலிருந்து ஏற்படும் தீங்கை விட்டும் நான் உன்னிடம் பாதுகாப்பு தேடுகிறேன். இன்னும் ஷைத்தான் அவனின் கூட்டாளிகளின் கெடுதிகளை விட்டும் பாதுகாப்பு தேடுகிறேன். என்னிடத்தில் இருக்கக் கூடிய கெட்ட விஷயங்களை விட்டும் உன்னிடத்தில் கார்மானம் தேடுகிறேன். (நூல்: திர்மிதி)

اَللّٰهُمَّ اَنْتَ رَبِّيْ لَا اِلٰهَ اِلَّا اَنْتَ خَلَقْتَنِيْ وَاَنَا عَبْدُكَ وَاَنَا عَلٰى عَهْدِكَ وَوَعْدِكَ

مَا اسْتَطَعْتُ اَعُوْذُ بِكَ مِنْ شَرِّ مَا صَنَعْتُ اَبُوْءُ لَكَ بِنِعْمَتِكَ عَلَيَّ وَاَبُوْءُ لَكَ بِذَنْبِيْ

فَاغْفِرْ لِيْ فَاِنَّهٗ لَا يَغْفِرُ الذُّنُوْبَ اِلَّا اَنْتَ (البخاري)

அல்லாஹ்வே! நீதான் எனது இரட்சகன். உன்னைத் தவிர வேறு நாயன் இல்லை. நான் உனது அடியானாக இருகக்க நீ என்னைப் படைத்தாய். உன்னுடைய ஒப்பந்தத்தின் மீதும் உனது வாக்கை நிறைவேற்றுவதைக் கொண்டும்என்றால் இயன்றளவு இருக்கிறேன். நீ எவைகளைப் படைத்திருக்கிறாயோ அத்தகைய கெடுதிகளை விட்டும் உன்னிடமே பாதுகாவல் தேடுகிறேன். என்மீது நீ அருளிய உபகாரத்தைக் கொண்டு உன்னளவிலேயே மீள்கிறேன். எனது பாவங்களை மன்னிக்க உன்னிடமே வேண்டுகிறேன். மன்னிப்பாயாக! நிச்சயமாக உன்னையன்றி பாவங்களை மன்னிப்போன் எவனுமில்லை. (நூல்: புகாரி)

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَعَلٰى آلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلٰى اِبْرَاهِيْمَ وَعَلٰى آلِ اِبْرَاهِيْمَ

اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ ، اَللّٰهُمَّ بَارِكْ عَلٰى مُحَمَّدٍ وَعَلٰى آلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلٰى

اِبْرَاهِيْمَ وَعَلٰى آلِ اِبْرَاهِيْمَ فِي الْعَالَمِيْنَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ (البخاري)

அல்லாஹ்வே! ஹழ்ரத் நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தார்கள் மீதும் ஸலவாத்தெனும் கருணையை பொழிந்தது போல் அண்ணல் நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி

www.sufimanzil.org

வஸல்லம் அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தார்கள் மீதும் ஸலவாத் என்னும் கருணையை சொரிந்தருள்வாயாக! நீயே புகழப்பட்டவனாகவும் கீர்த்திமிக்கோனாகவும் இருக்கிறாய்.

அல்லாஹ்வே! நபி இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தார்கள் மீதும் பரக்கத் சொரிந்தது போல்இ நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தார்கள் மீதும் ஈருலகிலும் பரக்கத் செய்வாயாக! நீயே புகழப்பட்டவனாகவும்இ கீர்த்திமிக்கோனாகவும் இருக்கிறாய். (10 முறை அல்லது அதற்கும் அதிகமாக ஓதவும்) (நூல்: புகாரி)

اَللّٰهُمَّ اِنِّيْ اَسْأَلُكَ الْعَافِيَةَ فِي الدُّنْيَا وَالْاٰخِرَةِ اَللّٰهُمَّ اِنِّيْ اَسْأَلُكَ الْعَفْوَ وَالْعَافِيَةَ فِيْ دِيْنِيْ وَدُنْيَايَ وَاَهْلِيْ وَمَالِيْ، اَللّٰهُمَّ اسْتُرْ عَوْرَاتِيْ وَآمِنْ رَوْعَاتِيْ ، اَللّٰهُمَّ احْفَظْنِيْ مِنْ بَيْنِ يَدَيَّ وَمِنْ خَلْفِيْ ،وَعَنْ يَمِيْنِيْ وَعَنْ شِمَالِيْ ، وَمِنْ فَوْقِيْ وَاَعُوْذُ بِعَظَمَتِكَ اَنْ اُغْتَالَ مِنْ تَحْتِيْ (ابوداود)

அல்லாஹ்வே! ஈருலகிலும் சுபிட்சமான வாழ்வை உன்னிடம் கேட்கிறேன். எனது பொருளிலும், குடும்பத்திலும், இருலோகக் காரியங்களிலும் நல்ல சுகத்தையும், பூரண மன்னிப்பையும் உன்னிடத்தில் வேண்டுகிறேன்.

யா அல்லாஹ்! எனது மானங்களை மறைப்பாயாக! எனக்கு ஏற்பட்டிருக்கும் திடுக்கத்திலிருந்து என்னை நீ பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! என்னில் முன்பும், பின்பும் வலதும், இடதும், மேல் பக்கமும், கீழ் பக்கமும் பாதுகாப்பு அளிப்பாயாக!

உனது கண்ணியத்தைக் கொண்டு எனக்கு (எதிராக) கீழ் ஏற்படுகின்ற சூழ்ச்சிகளை விட்டும் பாதுகாப்பாயாக! (நூல்: அபூதாவூத்)

اَصْبَحْنَا وَاَصْبَحَ الْمُلْكُ لِلّٰهِ وَالْحَمْدُ لِلّٰهِ لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ، لَهُ الْمُلْكُ

وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ، رَبِّ اَسْأَلُكَ خَيْرَ مَا فِيْ هٰذِهِ اللَّيْلَةِ وَخَيْرَ

مَا بَعْدَهَا، وَاَعُوْذُ بِكَ مِنْ شَرِّ مَا فِيْ هٰذِهِ اللَّيْلَةِ وَشَرِّ مَا بَعْدَهَا (مسلم)

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அரசாட்சிகள் அனைத்தும் அவனுக்கே அல்லாஹ்வைத் தவிர வேறு நாயன் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணைதுணை எதுவுமில்லை. அவனுக்கே புகழும் அரசாட்சிகளும் சொந்தம். எல்லாவற்றின் மீதும் ஆற்றல் உள்ளவன். அத்தகைய அல்லாஹ்வைக் கொண்டே காலை, மாலை காரியங்களை செய்கின்றோம்.

இறைவா! இரவில் ஏற்படுகின்ற நன்மைகளை உன்னிடத்தில் கேட்கிறேன். அவ்விரவிற்கு பின்னால் ஏற்படுகின்ற நன்மையையும் வேண்டுகிறேன். மேலும் அவ்விரவில் ஏற்படுகின்ற கெடுதிகளை விட்டும் அவ்விரவிற்குப் பின் ஏற்படுகின்ற கெடுதிகளை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். (நூல்: முஸ்லிம்)

www.sufimanzil.org